


04. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- தேசமும், சமூகமும் மேம்பட கல்வியின் முக்கியத்துவத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.
- நாட்டின் வளர்ச்சிக்கு வளங்கள் உருவாக்கம் அவசியம் என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் கூறியுள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தமிழகத்தில் இன்று தொடங்கின.
- தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டிற்கான 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- ஆதிதிராவிட பழங்குடியின கல்லூரி மாணாக்கருக்கான புதிய தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வருவதாக மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

தேசமும், சமூகமும் மேம்பட கல்வியின் முக்கியத்துவத்தை குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

உத்தரகாண்ட் மாநிலம் நைனிடாலில், குமாவுன் பல்கலைக்கழகத்தின் 20-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், விளிம்பு நிலை பிரிவினரின் நலன்கள் மற்றும் தேச கட்டமைப்பிற்காக மாணாக்கர் தங்களது கல்வியை பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திறன் வளர்ச்சி, அறிவுப்புலமை, வாழ்வியல் மதிப்பீடுகளை கல்வி வலுப்படுத்துவதாக குறிப்பிட்டார்.

நம் நாட்டின் பொருளாதாரம் வேகமாக வளர்வதாகவும், இளையோருக்கு புதிய வாய்ப்புகளை அரசு உருவாக்கி தருவதாகவும் கூறினார்

ஆராய்ச்சி, புதுமை கண்டுபிடிப்புகள் தொழில் முனைவோர் திறன்களை ஊக்குவிக்க உயர்கல்வி நிறுவனங்கள் செயலாற்ற வேண்டும எறும் குடியரசு தலைவர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு துணைத்தலைவர்

நாட்டின் ஏழை எளிய மக்கள் உட்பட அனைவருக்கும் சுகாதார நல வசதிகளை உறுதி செய்யும் வகையில் நம்நாடு வளர்ச்சியடைந்த பாதையை நோக்கி பயணிப்பதாக குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்

திருவனந்தபுரம் உயர் மருத்துவ தொழில்நுட்ப நிறுவனத்தில் இன்று உரையாற்றிய அவர், தேச வளர்ச்சிக்கு வளங்கள் உருவாக்கம் அவசியம் என்றும், இதன் பயன்கள் தொலைதூர பகுதி மக்களையும் சென்றடைய வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மருத்துவம் சார்ந்த ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு மத்திய அரசின் ஆதரவை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் புதுமை கண்டுபிடிப்புகளில் சாதனைகள் தொடர்பான கண்காட்சியையும் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

கத்தார் தலைநகர், தோஹாவில் சமூக மேம்பாட்டிற்கான 2-வது சர்வதேச உச்சி மாநாட்டில் மத்திய தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று பங்கேற்கிறார்

3 நாட்கள் நடைபெறும் இந்த உச்சி மாநாட்டின் துவக்க நிகழ்ச்சியில், தோஹா அரசியல் பிரகடனத்தில் நம் நாட்டின் அறிக்கையை அவர் வெளியிடுகிறார்.

வறுமை ஒழிப்பு, முழுமையான ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பு, அனைவருக்கும் ஏற்புடைய பணிகள், சமூக உள்ளடக்கம் என்ற தலைப்பிலான உயர்நிலை வட்டமேஜை பேச்சுவார்த்தைகளிலும் அவர் பங்கேற்கிறார்.

நம்நாட்டின் உள்ளடக்கிய மின்னணு சார்ந்த வளர்ச்சி மாதிரியை இதில் எடுத்துரைக்கும் அவர், ஏற்புடைய பணிகள் மற்றும் சமூக பாதுகாப்பு குறித்து உரையாற்றுகிறார்.

நித்தி ஆயோக் சார்பிலான கடைகோடி மக்களுக்கும் ஆளுமை என்ற நிகழ்வில் கலந்துகொள்ளும் அவர், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளில் இந்தியாவின் வெற்றி, சுயஉதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுறவு மூலம் மகளிருக்கு பொருளாதார ஆளுமை, சமூக பாதுகாப்பு விரிவாக்கம் ஆகியவை குறித்தும் ஆலோசனை மேற்கொள்கிறார்.

இம்மாநாட்டின் ஒருபகுதியாக கத்தார், ருமேனியா, மொரீஷியஸ், ஐரோப்பிய யூனியன் நாடுகளின் அமைச்சர்களுடன், டாக்டர் மாண்டவியா இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் தலைமை இயக்குநருடனும், ஐ.நா. உயரதிகாரிகளுடனும் அவர் பேசவுள்ளார்.

தொழிலாளர் பரிவர்த்தனை, திறன் வளர்ச்சி, சமூக பாதுகாப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம் குறித்து இதில் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

பீஹார்

பீஹாரில் 18 மாவட்டங்களில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளைமறுநாள் நடைபெறும் முதல்கட்ட வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் இன்று மாலையுடன்

நிறைவடைவதால் அரசியல் கட்சி தலைவரிகளின் பரப்புரை உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது.

பி.ஜே.பி. சார்பில் அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. ஜே.பி.நட்டா, திரு. அமித் ஷா, மகா கட் பந்தன் சார்பில் காங்கிரஸ் தலைவர் திரு.ராகுல்காந்தி, முதலமைச்சர் வேட்பாளர் தேஜஸ்வி பிரசாத் யாதவ் உள்ளிட்டோர் தத்தம் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டுகின்றனர்.

பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திரமோடி எனது வாக்குச்சாவடி எனது உரிமை என்ற தலைப்பில் பீஹாரில் மகளிரிடையே இன்று கலந்துரையாடுகிறார்.

இந்த கலந்துரையாடலை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

கோவை பாலியல் வன்முறை சம்பவ குற்றவாளிகள் மீது ஒருமாதத்திற்குள் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்து அதிகபட்ச தண்டனையை விரைந்து பெற்றுத்தர காவல் துறையினருக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இக்குற்றச் சம்பவம் மனித நேயமற்றது என்று கண்டனம் தெரிவித்துள்ள முதலமைச்சர் மகளிர் அனைத்து துறைகளிலும் அடையும் முன்னேற்றமே இத்தகைய ஆணாதிக்க மனநிலைக்கு

முற்றுப்புள்ளி வைத்து முற்போக்கு சமூகமாக நாம் மாற வழிகோலும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

எல். முருகன்

கோவை வன்முறை சம்பவத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினும், காவல்துறையினரும், முழு பொறுப்பேற்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் வலியுறுத்தி உள்ளார்.

தமிழ்நாட்டில் இச்சம்பவம் நேரிட்டது துரதிஷ்ட வசமானது என்று கூறியஅவர், மகளிருக்கு பாதுகாப்பு இல்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

எஃகு

நாட்டில் இன்னும் 5 ஆண்டுகளில் 300 மில்லியன் டன் எஃகு திறன் எட்ட திட்டமிடப்பட்டுள்ளதாக எஃகு அமைச்சகத்தின் செயலர் திரு. சந்தீப் பவுண்டிரிக் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பின் எஃகு உச்சி மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், தேச பொருளாதாரத்தின் முதுகெலும்பாக எஃகு துறை திகழ்கிறது என்றும்,

வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட இது இன்றியமையா பங்காற்றுவதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில் நம்நாட்டின் எஃகு திறன் 200 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளதாகவும், கட்டமைப்பு வளர்ச்சி, உள்நாட்டு தேவை அதிகரிப்பே இதற்கு காரணம் என்றும் கூறினார்.

நீடித்த எஃகிற்கு வழிகோலும், தேசிய இயக்கத்தின் கீழ் பசுமை மற்றும் ஹைட்ரஜன் அடிப்படையிலான தொழில் நுட்பங்களை மத்திய அரசு ஊக்குவிப்பதாகவும் திரு. சந்தீப் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட 9 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இன்று தொடங்கியுள்ளன.

51 கோடி வாக்காளர்களை கொண்ட இந்த மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இப்பணிகள் அடுத்தமாதம் 4-ம் தேதி வரை நடைபெறும்.

வரைவு வாக்காளர் பட்டியல் அடுத்தமாதம் 9-ம் தேதி வெளியிடப்பட்டு இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி மாதம் 7-ம் தேதி வெளியிடப்படவுள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடங்கிய நிலையில், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுவீடாக சென்று உரிய விவரங்களை கேட்டறிந்து கணக்கெடுப்பு படிவத்தை வழங்குகின்றனர்.

திருவள்ளூர், ஈரோடு, திண்டுக்கல், தூத்துக்குடி, திருப்பத்தூர் மாவட்டங்களில் இப்பணிகள் தொடங்கியுள்ளன.

திண்டுக்கல்லில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் திருத்தப்பணிகளை மேற்கொள்ளும் விதமாக விவேகானந்தா நகரில் வாக்களர்களின் வீட்டிற்கு நேரடியாக சென்று படிவங்களை வழங்கினார்.

எந்தவொரு வாக்காளரும் விடுபடக்கூடாது என்ற நோக்கில் மேற்கொள்ளப்படும் இப்பணிகளை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

.. வாய்ஸ் ..

திருப்பத்தூரில் கணக்கெடுப்பு படிவங்கள் விநியோகிக்கும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சிவசௌந்தரவள்ளி நேரில் ஆய்வுசெய்தார்.

ஈரோடு மாவட்டத்தில் 226 மேற்பார்வையாளர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.கந்தசாமி கூறியுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத வாக்காளர்கள் மத்திய மாநில அரசு ஊழியர் அல்லது ஓய்வூதியதாரருக்கான அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு, ஆதார், கல்விச்சான்றிதழ், நிரந்தர இருப்பிட சான்றிதழ் உள்ளிட்ட 12 அடையாள ஆவணங்களில் ஏதாவது ஒன்றை கூடுதலாக சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பொதுத் தேர்வு அட்டவணை

தமிழ்நாட்டில் நடப்பு கல்வியாண்டிற்கான 10, 12-ம் வகுப்பு பொதுத் தேர்வு தேதிகள் அறிவிக்கப் பட்டுள்ளன.

12-ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மார்ச் 2-ம் தேதி தொடங்கி மார்ச் 26-ம் தேதிவரை நடைபெறுகிறது.

10-ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மார்ச் 11-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 6-ம் தேதிவரை நடைபெறும்.

சென்னை கோட்டூர் புரத்தில் தேர்விற்கான அட்டவணையை வெளியிட்டு பேசிய மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி மாணவர்கள் பயமின்றி தேர்வை எதிர்கொள்ள வேண்டுமென்று வாழ்த்தினார்

.. வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழக அரசின் நலத்திட்டங்கள், பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதுடன், முடிவடைந்த திட்டப்பணிகளை துவக்கி வைத்து அவர் பேசினார்.

மகளிர் சுய உதவிக்குழுவினர், தங்களது அடையாள அட்டைகளை பயன்படுத்தி, பேருந்துகளில் கட்டணமில்லாமல்

பயணித்து உற்பத்தி பொருட்களை விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்

மாநிலத்தில் காலை உணவு திட்டத்தின் கீழ், இதுவரை 20 லட்சம் குழந்தைகள் பயன்பெற்றுள்ளதாக கூறிய அவர், 19 லட்சம் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

மதிவேந்தன்

தமிழகம் முழுவதும் ஆதிதிராவிட பழங்குடியின கல்லூரி மாணாக்கருக்கு புதிய தங்கும் விடுதிகள்இ பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருவதாக மாநில ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு.மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு ரங்கம்பாளையத்தில் மாணாக்கர் விடுதி கட்டுமான பணிகளை இன்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழங்குடியின மாணாக்கர் உயர்கல்வி பெற அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து செயல்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்ட அஞ்சல்துறையின் மூலம் ஜீவன் பிரமான் டிஜிட்டல் வாழ்நாள் சான்றிதழ் வரும் 30ம் தேதி வரை வழங்கப்படுவதாக மாவட்ட அஞ்சல்கோட்ட கண்காணிப்பாளர் திரு.அருள்தாஸ் தெரிவிக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் ஊர்க்காவல்படை காலி பணியிடங்களுக்கு இன்று நடைபெறவிருந்த சான்றிதழ் சரிபார்ப்பு, உடல் தகுதி தேர்வுகள் நிர்வாக காரணங்களினால் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. சிவபிரசாத் தெரிவித்துள்ளார்

தேர்விற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖